REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ் ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 217

# நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர்: அண்ணதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்

உள்நாடு (இலங்கை உட்பட)

| | |
|---|---|
| ஆண்டு | ரூ. 24—0—0 |
| 6 மாதம் | ரூ. 12—0—0 |
| 3 மாதம் | ரூ. 6—0—0 |
| வெளிநாடு : | |
| ஆண்டு | ரூ. 30—0—0 |
| 6 மாதம் | ரூ. 15—0—0 |
| 3 மாதம் | ரூ. 7—8—0 |

சென்னை: மாசி 12உ செவ்வாய் (23—2—54) ★ ★ ★ வெளியூர்: மாசி 13உ புதன் (24—2—54)

# கவர்னர் சந்தானத்திற்கு எதிர்ப்பு!

—:o:—

## சபையிலிருந்து எதிர் கட்சி உறுப்பினர் வெளியேற்றம்!

—( : )—

## காலையில் தடியடி தர்பார்!

### மாலையில் கவர்னருக்கு விருந்து தர்பார்!

### நவுகாங்கில் நடந்த அடக்குமுறை சட்ட சபையில் எதிரொலித்தது

ரீவா, பிப். 22—

விந்திய பிரதேச சட்ட சபை இன்று கூடியபொழுது லெப்டினெண்ட் கவர்னர் கே. சந்தானம் அய்யங்கார் தனது திறப்புரையைப் படித்தார். அதுசமயம் எதிர்க் கட்சியைச் சேர்ந்த 16 சட்ட சபை உறுப்பினர்கள், சபையிலிருந்து வெளியேறிவிட்டனர்.

சென்ற வாரத்தில் நவுகாங் என்னும் நகரில் ஒரு தொத்து நோய் மருத்துவ நிலையத்தைத் திறந்து வைக்க கவர்னர் சென்ற பொழுது அவருக்கு எதிராக கருப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்த பொது மக்களைத் தடிகொண்டு தாக்கியும், அப்பாக்கியால் இடித்தும் சர்க்கார் அடக்குமுறையை அவிழ்த்துவிட்டதைக் கண்டிக்கும் முறையிலேயே, இந்த வெளியேற்றம் என்று எதிர்க்கட்சித் தலைவர் ஆர். கே. சுனா அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அடக்குமுறைக்கு ஆளான பொது மக்களில் 15 பேர்கள் காயம் பட்டுள்ளனர் என்றும், தடியடி கொடுக்கப்பட்ட அன்று மாலையில் நடைபெற்ற தேனீர் உபசாரத்தில் கவர்னர் கலந்துகொண்டிருப்பது கண்டிக்கத்தக்கதாகும் என்றும் அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

### மின்சார விநியோக திருத்தச் சட்டம்

சென்னை, பிப் 22—

சென்னை மின்சார விநியோக ஆர்ஜித சட்டம் செல்லுபடியாகாதென்று சமீபத்தில் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்தது.

இந்தச் சட்டத்தின்கீழ் ஏற்கனவே சில மின்சார விநியோக கம்பெனிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவைகளுக்கு நஷ்டஈடும் கொடுக்கப்பட்டு விட்டன. ஆகவே, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு பூராவும் பரிசீலனை செய்யப்பட்ட பிறகு, அவசியமானால்; அந்தச் சட்டத்தைச் செல்லுபடியானதாக்க சீக்கிரத்தில் ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வர வேண்டியிருக்கலாம் என்று சென்னை கவர்னர், சட்டசபை வரவு-செலவுக் கூட்டத்தில பேசுகையில் குறிப்பிட்டார்.

## ராஜப் பிரமுகருக்கு எதிராக ஐதராபாத் சட்ட சபையில் சம்பவம்

—( : )—

### இரு சுயேச்சையினர் நீங்கலாக எதிர்க் கட்சி உறுப்பினர் அனைவரும் வெளியே சென்றனர்!

ஐதராபாத் பிப். 22—

ஐதராபாத் சட்டசபை வரவு - செலவு திட்டக் கூட்டம் இன்று தொடங்கியது. சபையைத் துவக்கி வைக்க ராஜப் பிரமுகர் சபையில் காலெடுத்து வைத்ததும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் சபைக்கு வெளியில் காலெடுத்து வைத்து வெளிவந்து விட்டனர். இரண்டு சுயேச்சை உறுப்பினர்கள் மட்டும் சபையில் தங்கி இருந்தனர்.

இந்த வெளியேற்றத்திற்குக் காரணமாக, 'விரும்பத் தகாத' நைஜாமை ராஜப் பிரமுகராகக் கொண்டிருப்பது கூடாதென்பதற்காகவும், பொதுவாக ராஜப் பிரமுகர் என்ற அமைப்பே கூடாதென்பதற்காகவும் தான் என்று சொல்லப்படுகிறது.

பிரிட்டிஷ் விமானப் படைக்கு இவ்வாண்டில், முதல் முறையாக அணுகுண்டு விநியோகிக்கப்படும்.

# தூத்துக்குடி நிதிக்கு நெல் மூட்டை காணிக்கை

—( : )—

## கிராம மக்களின் தி. மு. கழகப் பற்றுக்கு இது ஒரு எடுத்துக்காட்டு

### மதுரை தந்த பெருந் தொகைக்கு பொதுச் செயலாளர் நன்றி

மதுரை, பிப். 21

"புதிய கல்வித் திட்டத்தை எடுத்துக்கொண்டால், முதன் முதலில் பிடிவாதமாகவும், வர்ணாசிரம முறையினும் அமுல் நடத்துவதாக இருந்த ஆச்சாரியார், அந்த எண்ணத்தைக் கைவிட்டு, குறைந்த மணி நேரத்தில் அதிகப்படியான குழந்தைகள் படிப்பதற்காகவே இத்திட்டம் என்கிறார், இந்த மாற்றம் யாருடைய எதிர்ப்பால்? தி. மு. கழகத்தின் எதிர்ப்பால்தானே!"

"கல்லக்குடி அறப்போராட்டத்தை எடுத்துக்கொண்டாலும், அங்கு தி. மு. கழகத் தோழர்கள் ஒட்டிய 'கல்லக்குடி' என்ற அட்டைகள் இன்றுவரை அகற்றப்படவில்லையே! அது ஏன்? தி. மு. கழகத்தின் வெற்றியல்லவா அது!'

புதிய கல்வித் திட்டத்தைப் பெரும் பெரும் காங்கிரஸ் தலைவர்களெல்லாம் எதிர்த்தும், ஆச்சாரியார், திட்டத்தை விடாப்பிடியாக நடைமுறைக்குக் கொண்டுவர முயலுகிறார். கூடிய விரைவில் அத்திட்டம் நகரங்களுக்கும் கொண்டுவரப்படுமாம். ஆகவே, தி. மு கழகத்தின் வேலை முடிந்துவிடவில்லை. மீண்டும் ஒரு பெரிய போராட்டத்தை கழகம் தொடங்கலாம். அந்தப் போராட்டத்தில் கண்ணியமுள்ள காங்கிரஸ்காரர்களும் கலந்துகொள்ளலாம்."

தி. மு கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், இன்று மாலை மதுரையில் நடைபெற்ற தூத்துக்குடி நிதி அளிப்புக் கூட்டத்தில் மேற்கண்டவாறு கூறினார்.

கூட்டத்திற்கு தோழர் என். முத்து தலைமை வகித்தார்.

தோழர்கள் அண்ணாதுரை அவர்களுக்கும், ஈ. வெ. கி. சம்பத் அவர்களுக்கும் பல படிப்பகங்கள், கிளைக் கழகங்கள் சார்பாக மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. தூத்துக்குடி வழக்கு நிதிக்காக அண்ணாதுரை அவர்களிடம் ரூ. 1000 கொடுக்கப்பட்டது.

மாடக் குளத்தைச் சேர்ந்த விவசாயிகள் ஒரு மூட்டை நெல்லை தூத்துக்குடி வழக்கு நிதிக்குக் கொடுத்தனர்.

தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், அ. பொன்னம்பலனார் ஆகியோர் பேசிய பின், பொதுச் செய

(4-ம் பக்கம் பார்க்க)

### பிரிட்டனின் பாதுகாப்புத் திட்டங்கள்

மூப்படைகளுக்கும் நவீன சாதனங்கள் அமைக்கப்படும்

லண்டன், பிப். 23—

பிரிட்டனின் பாதுகாப்புச் செலவு இவ்வாண்டில் 100,06,00,000 பவுன்கள் செலவாகும்.

அடுத்த யுத்தம் ஏற்பட்டால் அணுசக்தி ஆயுதங்கள் அதில் முக்கியமாக இடம் பெறும். ஆகவே, அதற்குத் தயாராக இருக்கும்படி பிரிட்டனின் தரைப்படை, விமானப்படை, கடற்படை இவைகளுக்கு நவீன சாதனங்கள் அமைக்கப்பட விருக்கின்றன.

காஷ்மீர் வாக்கெடுப்பு நிர்வாக அதிகாரி அட்மிரல் நிமிட்ஸ் ராஜினாமா செய்து விட்டார் என்று தமக்குத் தெரிவதாக பாக். பிரதமர் கூறுகிறார்.

### ஆயுதபலத்தைப் பெருக்க அமெரிக்க உதவி!

பாக்-பிரதமர் கூறுகிறார்

கராச்சி, பிப். 22—

பாகிஸ்தான் தனது ஆயுதபலத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக அமெரிக்காவிடம் இராணுவ உதவி கேட்டிருப்பதாகவும், அமெரிக்காவின் பரஸ்பர பாதுகாப்பு சட்டத்தின் வரம்புக்குட்பட்டே அந்த உதவி அளிக்கப்படல் வேண்டுமெனக் கேட்டிருப்பதாகவும், ஆனால், அமெரிக்கா இன்னும் பதிலனுப்பவில்லை என்றும் பாக் பிரதமர் அறிவித்தார்.

# கல்லக்குடி அறப்போர்

திருச்சி, பிப். 22—

கல்லக்குடி அறப்போராட்டம் மீண்டும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகிறது. தோழர்கள் இரத்தினம், தங்கராஜ் இருவரும் இன்று இரயில் நிலையம் சென்று, 'கல்லக்குடி' என்று பெயர் பொறிக்கப்பட்ட தாள்களை ஒட்டி வந்தார்கள். இப்பணி அமைதியாகவே நடந்தேறியது.

# அறைகூவலிட்ட அமைச்சர் பின் வாங்குகிறார்

## 'விவாதம்' என்ற சொல்லுக்குப் புதிய வியாக்யானம் தருகிறார்

### விவாதத்தைக் குத்துச் சண்டைக்கு ஒப்பிடுபவர் மக்களாட்சி முறைக்கே தகுதியற்றவராவார்

கோவை, பிப். 22—

"விவாதம் என்றால் ஒரு பொதுக் கூட்டத்தைக் கூட்டி அதில் திட்டத்தை ஆதரித்தும், எதிர்த்தும் பேசுவதை நான் குறிப்பிடவில்லை. அதனால் ஒரு விஷயத்தைப் பற்றி இரண்டு கோணங்களிலிருந்து வரும் கருத்தைத்தான் தெரிந்து கொள்ள முடியும்."

"கோதாவிலிறங்கி குஸ்தியோ, குத்துச் சண்டையோ போடுவது போல வாய்ப் பேச்சு சாமர்த்தியத்தைப் பார்க்கும் விவாதத்தில் பயனில்லை."

"யார் வேண்டுமானாலும் தக்க ஆதாரத்துடன் புதிய கல்வித் திட்டம் பற்றி விவாதிக்க முன் வரலாம். நான் ஏற்க தயாராக இருக்கிறேன். அமைதியாக ஒரு அறையில் உட்கார்ந்து கொள்வோம். திட்டத்தின் அம்சங்களைப் பற்றி விவாதிப்போம்."

"மனிதர்களால் வகுக்கப்படும் திட்டம் குறையில்லாதிருக்காது. விவாதத்தின் போது திட்டத்தில் குறை இருப்பதாக காணப்பட்டால் அவற்றை நீக்கவும் நான் தயாராக இருக்கிறேன்."

—இவ்வாறு நிதி மந்திரி சுப்பிரமணியம், உதவி இன்ஸ்பெக்டர்கள் மாநாட்டில் கூறினார்.

புதிய கல்வித் திட்டம் பற்றி விவாதிக்கத் தயார் என்றும் அமைச்சரை தேதி குறிப்பிடும் அனுப்பும்படியும், சென்னை மாவட்ட தி. மு. கழகச் சார்பில் பதிவுத் தபால் மூலம் மந்திரிக்கு தெரிவிக்கப்பட்டது. ஆனால், அந்தக் கடிதங்களுக்கு மந்திரி சுப்பிரமணியம் இதுவரை நேரடியான பதில் எழுதவில்லை.

# நம் நாடு

சென்னை 23—2—1954 செவ்வாய்


# ஆரம்ப ஆசிரியர்கள் தீர்ப்பு

செங்கல்பட்டு மாவட்ட ஆரம்ப ஆசிரியர் மாநாடு, சென்ற சனி-ஞாயிறு கிழமைகளில் சைதாப்பேட்டையில் நடைபெற்று இருக்கிறது. மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்த ஆசிரியரும், கலந்திருந்த 'ஆரம்பக் கல்வி' இதழின் ஆசிரியரும், மற்றும் பல ஆசிரியர்களும் சென்னை சர்க்காரின் எதேச்சாதிகார புதிய கல்வித் திட்டத்தைக் குறித்து, விளக்கமாகவும் ஆணித்தரமாகவும் வெட்டியும் ஒட்டியும் பேசி இருக்கிறார்கள். மாநாட்டில் கலந்துகொண்ட ஆசிரியர்கள் அனைவரும் நமது தி. மு. கழகத்தின் உறுப்பினர்கள் அல்லர். ஆளவந்தார்களின் கட்சியைச் சேர்ந்தவர்களும் மாநாட்டில் பங்கு கொண்டுள்ளனர்.

சிறுவர்களுக்கு எத்தகைய கல்விப் பயிற்சி தரப்பட வேண்டும் என்று கூறுவதற்கு, கனம் ஆச்சாரியாருக்குள்ள அறிவாற்றலைக் காட்டிலும், கடுகத்தனையாவது அவர்களுக்குக் கூடுதலாக இருக்கும் என்பதில் எவருக்கும் ஆட்சேபணை இருக்கும் என்று சொல்வதற்கில்லை. தினம் தினம் மாணவச் சிறுவர்களிடை நெருங்கிப் பழகிக்கொண்டிருப்பவர்களுக்குத்தான் தெரியும், சிறுவர்களின் பக்குவப்படாத நெஞ்சத்தின் மிருதுத்தன்மையும், மூங்கில் முளை போன்ற இளங் குருத்துத்தன்மையும்! அவர்கள் மொட்டு மூளையில் தரப்படும் கல்வி பதிந்து நிற்கும் அளவில், எந்த வகையில் கற்பிப்பது என்ற முறையைக் கற்றிருப்பவர்கள் ஆரம்ப ஆசிரியர்களேயாவர்.

சின்னஞ் சிறு பிள்ளைகளிடம் பழகுவதற்கு ஒரு வாய்ப்பும், கல்வி போதிப்பதற்கான குறிப்பிட்ட பயிற்சியும் பெற்றுள்ள தொடக்கக் கல்வி ஆசிரியர்களைக் கலந்துகொண்டு தான், அந்தக் கல்வி இனத்தில் எந்தவிதச் சீர்திருத்தம் செய்வதாக இருந்தாலும் செய்ய முன்வந்திருக்க வேண்டும் கனம் ஆச்சாரியார். ஆனால், கனம் ஆச்சாரியார் அவர்களோ, தொடக்கக் கல்வியில் பண்பட்டுள்ள அவர்களை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. எல்லோரையும் அலட்சியப்படுத்தினதுபோலவே, ஆரம்ப ஆசிரியர்களையும் குப்பை கூளம் போல் ஒதுக்கித் தள்ளிவிட்டே புதிய தொடக்கக் கல்வி திட்டத்தைப் புகுத்தினார்.

சிறுவர்களின் தொடக்கக் கல்வித் துறையில் ஆரம்ப ஆசிரியர்கள் பெற்றுள்ள அனுபவத்தை, கனம் ஆச்சாரியார் பொருட்படுத்தாமல் போனதற்கு, அவ்வளவு பெரிய அமைச்சர் பதவியில் வீற்றிருப்பவர், ஒரு சாதாரண ஏழை ஆரம்பப் பள்ளி ஆசிரியரை மதித்து நடப்பது தம் பதவிக்கே இழுக்காகும் என்ற, போலி கவுரவம் தேடிகள் சமாதானம் கூறுவதாக இருந்தாலும், தமது புதிய திட்டத்தை வெற்றிகரமாக நடத்த வேண்டியவர்கள் ஆரம்ப ஆசிரியர்களாயிற்றே, அவர்களைத் தட்டிக் கொடுத்தால்தானே திட்டத்திற்கு ஒத்துழைப்பு கிடைக்கும் என்ற அரசியல் 'காக்கா பிடித்தல்' வித்தையையாவது கனம் ஆச்சாரியார் மேற்கொள்ள முன்வந்திருக்க வேண்டும். திட்டத்தில் உள்ள மறைக்க முடியாத குறைபாடுகளில் ஆசிரியர்களுக்கு உண்மையான வெறுப்பு இருந்தபோதிலும், 'அவ்வளவு பெரிய மனிதர் கை தொட்டு இழுத்தால், எப்படி சம்மதிக்காமல் இருப்பது?' என்ற போக்கிலாவது, ஊருக்கு இளைத்த பிள்ளையார் கோயில் ஆண்டிகளாக உள்ள தங்களையும் முதன் மந்திரி மதித்து நடக்கிறாரே, அதற்காகவாவது அவருடைய உதவாக்கரை திட்டத்தை வெற்றிபெறச் செய்ய, கூடுமான வரை வஞ்சனை இல்லாமல் முயற்சிப்போம் என்றாவது ஆரம்ப ஆசிரியர்கள் முன்வந்திருக்கக்கூடும். ஆனால், அந்தச் சாதாரண அறிவும் கூட, சகல கலா வல்லவர் என்று சிலாகித்துச் சொல்லிக் கொள்ளப்படுகிற கனம் ஆச்சாரியாரிடம் மருந்துக்கும் இல்லாமல் போய்விட்டது.

அதாவது, புதிய திட்டத்தைப் புகுத்த வேண்டும் என்று நினைத்தபொழுதே, தமது விருப்பத்தை ஆரம்ப ஆசிரியர்களுக்கு விளக்கமாக அறிவித்து, அவர்களின் ஒத்துழைப்பை முன்கூட்டியே பெற, கனம் ஆச்சாரியார் முன்வந்திருக்க வேண்டும்.

அந்த வகையில் மன்னிக்க முடியாத தவறு செய்துவிட்டபோதிலும், திட்டத்தைப் புகுத்தினபிறகாவது, அதிகாரத்தைக் காட்டி மிரட்டாமல், 'திட்டத்தை முடிவானது என்று ஆசிரியர்கள் கொள்ள வேண்டாம்-திட்டத்தைப் பரீட்சார்த்தமாக அமுல் நடத்துங்கள்—பின்னர் திட்டம் பயனற்றது என்று கண்டால் திட்டத்தில் காணும் குறைகளைத் திருத்திக் கொள்ளலாம்' என்று ஆசிரியர்களுக்குக் கோரிக்கை வெளியிட்டு, ஆசிரியர்களின் ஒத்துழைப்பை கனம் ஆச்சாரியார் நாடிப் பெற்றிருக்க வேண்டும். அதுகாலை, ஆசிரியர்கள் மட்டுமல்லாமல், நாட்டு நல்லறிவாளர்களும் திட்டத்தில் குறை கண்டபோதிலும், திட்டத்தைப் புகுத்துவதில் புகுத்தினவருக்குள்ள நல்லெண்ணத்தில் சந்தேகங் கொள்ளாமல் இருந்திருப்பர். நிற்க,

புதிய திட்டத்தினால் மாணவர் தொகை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது என்றும், பள்ளிக்கு வரும் சிறுவர்களின் தொகை இரட்டிப்பாகும் என்ற திட்டத்தின் குறிக்கோள் வெறும் பித்தலாட்டமானது என்றும், பள்ளிக்கு வெளியில் கண்காணிப்பு இல்லாமல் சிறுவர்கள் விரட்டப்படுவதால் சோம்பேறிகளாகி வீணாகக் கெடுகிறார்கள் என்றும், பெற்றோர்கள் இரு வேளைக் கல்வி போதனையையே விரும்புகிறார்கள் என்றும், பாருலேகர் அறிக்கைப்படி இரண்டு வேளைகளிலும் மாணவர் தொகை இரட்டிப்பானால் அடுத்த ஆண்டில இப்போதுள்ள ஆசிரியர்களில் 1000 ஆசிரியர்களுக்கு வேலையில்லாமல் போகுமென்றும், மாநாட்டில் புதிய கல்வித் திட்டம்பற்றி எதிர்ப்பாக ஒரு தீர்மானம் நிறைவேறி இருக்கிறது.

இந்தத் தீர்மானத்தைஏகோமனமாக அங்குக் கூடியிருந்த ஆசிரியர்கள் ஆதரித்து நிறைவேற்றி இருக்கிறார்கள். ஏற்கனவே ஆசிரியர்களை பொருட்படுத்தாமல் செய்த தவறுக்குக் கழுவாய் தேடும் நினைப்போடாவது கனம் ஆச்சாரியார் தமது திட்டத்தை வாபஸ் பெறுவது நல்லது. அதை விட்டுவிட்டு வீண் பிடிவாதம் காட்டி வருவாரானால், அதற்கான விலையைக் கொடுக்க வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்படுவதில் ஆச்சரியமொன்றுமில்லை.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட மற்ற ஒரு முக்கியமான தீர்மானம் பற்றி பிறகு எழுதுவோம். காங்கிரஸ் ஆளவந்தார்களின் காய்தல் உவத்தலுக்கு தங்கள் உரிமையைப் பலியிட்டு விடாமல், சிறுவர்களின் எதிர்காலம் பற்றி அக்கறை கொண்டு, புதிய திட்டத்தின் குறைபாடுகளை விளக்கி, நாட்டு மக்களுக்கு, அஞ்சாமல் அறிவுறுத்திய ஆரம்ப ஆசிரியர்களை நாம் மனமாரப் பாராட்டுகிறோம்.

## ஒரு கோடி மக்கள் வீடின்றி தவிப்பு!

—:-:—

### 55 பெரிய நகரங்களில் 53 நாசமாயிற்று!

கோரியாவின் இன்றைய நிலைமை

கொழும்பு, பிப். 23—

தென் கொரியாவில், யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட சேத விவரங்களை கண்டியில் நடைபெறும் 'ஈகேப்' மாநாட்டில் தென் கொரியப் பிரதிநிதி வெளியிட்டிருக்கிறார்.

சேத விவரங்களாவன:—

6 லட்சம் வீடுகள் அடியோடு நாசமாகிவிட்டன; ஆஸ்பத்திரிகளில் 90 சத விகிதம் வேலை நடைபெற லாயக்கற்றதாகி விட்டது; 55 பெரிய நகரங்களில் 53 நகரங்கள் நாசமாயிற்று; கிராமங்களில் ஐந்தில் ஒரு பங்கு அழிந்தே போயிற்று; ஒரு கோடி மககள் வீடின்றித் தவிக்க நேரிட்டது; 1 லட்சம் குழந்தைகள் அனாதைகளாயினர்; பள்ளிக்கூடங்களில் பாதி பழுதடைந்துவிட்டன. 300 கோடி டாலர்களுக்கு நஷ்டமேற்பட்டிருக்கலாம்.

## நோபல் பரிசு பெற்றவர் இந்தியா வருகை

சொற்பொழிவுகளாற்ற நேருவின் அழைப்பு

சென்னை, பிப். 23—

இந்தியாவில் சொற்பொழிவாற்ற சுற்றுப் பிரயாணத்தை மேற்கொள்ளும்படி பிரபல நாவலாசிரியரும், நோபல் பரிசு பெற்றவருமான தாமஸ் மான் என்பவரை இந்தியப் பிரதம மந்திரி பண்டித நேரு அழைத்திருக்கிறார். மான் (78 வயது) இப்போது ஸ்விட்சர்லாந்தில் இருக்கிறார்.

## பாகிஸ்தானுக்கு நகீப் வருகை!

—o—

கெய்ரோ, பிப். 23—

பாகிஸ்தானுக்கு வருகை தருமாறு கவர்னர் ஜெனரல் குலாம் முகமது அனுப்பியிருந்த அழைப்பை எகிப்து தலைவர் நகீப் ஏற்றுக்கொண்டுவிட்டார்.

## பஞ்சாபி மொழியை சாக்கார் மொழியாக்குக!

யுவர்கள் கோரிக்கை

லாகூர், பிப். 23—

பஞ்சாபி மொழியை பாகிஸ்தானில் சர்க்கார் மொழியாகச் செய்ய வேண்டும் எனது வற்புறுத்த மாநாடு ஒன்று பஞ்சாப் யுவர்களால் நடத்தப்படும்.

ஒருநாளை பஞ்சாபி தினமாகக் கொண்டாடவும உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

# ஆப்கானிஸ்தானில் - இனாம் கல்வி போதனை!

—:o:—

## தொடக்கக் கல்வி முதல், கல்லூரி பட்டப்படிப்புவரை ஒரே நடைமுறை

சென்னை, பிப். 22—

[இந்தியாவிற்கு வந்துள்ள ஆப்கானிஸ்தான் கலாசாரக் குழுவினர், நேற்று மாலை ராயப்பேட்டையில் உள்ள இந்திய ஊழியர் சங்கத்திற்குச் சென்றிருந்தனர். அப்பொழுது அவர்களை வரவேற்று உபசரித்தக் கூட்டத்தில், அவர்கள் தங்கள் நாட்டின் தற்கால நிலைபற்றி குறிப்பிட்டனர். அதன் சாரம் பின் தரப்படுகிறது]

### இனாமாகக் கல்வி

ஆப்கானிஸ்தான் மக்கள் தொகையில் நூற்றுக்கு 16 பேர் கல்வி அறிவு பெற்றுள்ளனர். மொத்த சர்க்கார் வருமானத்தில் கல்விக்காக அந்த சர்க்கார் 11 சத விகிதத்தைச் செலவு செய்கிறது. தொடக்கக் கல்வி பயிற்சி முதல் கல்லூரிப் படிப்பு வரை இனாமாக சர்க்கார் செலவில் கல்வி போதிக்கப்படுகிறது.

### கட்டாய தொடக்கக் கல்வி

அங்கு கட்டாயத் தொடக்கக் கல்வி நடைமுறையில் இருக்கிறது. தொடக்கக் கல்வி 6 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு தரப்படுகிறது. அடுத்தப் படிப்பு, 7 முதல் 9 வரை பிரிவினை செய்யப்பட்டு இருக்கிறது. 10, 11, 12 என்ற மூன்று பிரிவுகள் கல்லூரிப் படிப்புத் துறைக்கெனக் கணக்கிடப்பட்டிருக்கின்றன.

### பெண் கல்வி

அதன் பிறகு மாணவர்கள் சட்டம், மருத்துவம், இலக்கியம், சமயம் ஆகியவற்றைக் கற்க வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஆணும், பெண்ணும் ஒன்றாகச் சேர்ந்து படிக்கும்முறை அங்கு கிடையாது. எல்லாக் கல்வித் துறைகளிலும், பெண்கள் தனியாகக் கற்றுத் தேற ஏற்பாடுகள் உண்டு. அங்கு திறமை மிகுந்த பெண் ஆசிரியர்கள் உள்ளனர். கல்வி போதனை, மருத்துவம் ஆகிய இரண்டு துறையில் மட்டும் தான் பெண்களுக்கும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளன.

### முகமூடி

நகரப் பெண்களிடையேதான் முகமூடி அணியும் பழக்கம் இருந்துவருகிறது. நாட்டுப்புறங்களில் முகமூடி யணியாமல் பெண்கள் உலாவுவார்கள்.

### செய்தித் தாள்கள்

தினத்தாள், கிழமை இருமுறை இதழ், திங்கள் வெளியீடு, ஆக அனைத்துமாக மொத்தத்தில 45 பத்திரிகைகள் அங்கு வெளியாகின்றன. ஒன்று நீங்கலாக மற்றவைகள் எல்லாம் புஷ்டுமொழியிலாவது பாரசீக மொழியிலாவதுதான் நடைபெறுகின்றன. அவைகளுக்குள்ள ஆதரவு நல்ல முறையில் இல்லை. 'அனிகப்' என்ற இதழும், காலை வெளியீடான 'இஸ்லாம்' இதழும் சேர்ந்து 11,000 பிரதிகள்தான் செலவாகின்றன. இந்தக் குறைவுக்குக் காரணம் சரியான போக்குவரத்து சாதனம் இல்லாததும், நவீன அச்சு இயந்திர வசதி இல்லாததுமே காரணங்களாகும. இன்னும் இரண்டு ஆண்டு காலத்திற்குள் 'லோட்டரி' அச்சு இயந்திரங்கள் வாங்குவது என சர்க்கார் முடிவிற்கு வந்திருக்கிறது.

ஆட்சிமொழி அங்கு புஷ்டுவும், பாரசீகமும் ஆட்சிமொழிகளாக உள்ளன. இந்த இரண்டு மொழிகளும் மாணவர்களுக்குக் கட்டாய பாடமாக வைக்கப்பட்டுள்ளன.

### சட்டத் துறை

அங்கு, இஸ்லாம் மதச் சட்டமும், நவீன காலச் சட்டமும் நீதி வழங்குவதில் மேற்கொள்ளப்படுகின்றன. திருடினவனின் கரத்தை வெட்டிவிட வேண்டும் என்று இஸ்லாம் சட்டம் கட்டளையிடுகிறது. ஆனால், அதன்படி திருடினவனின் கை, இப்பொழுது வெட்டப்படுவது கிடையாது.

### அரசு

அங்கு, இப்பொழுது உள்ளது கோன் குடியாட்சியாகும். பிரதமரும், அமைச்சர் குழுவும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக்கொண்டு இயங்கும் தேசிய சபையும் ஆப்கானிஸ்தானத்தை ஆட்சி செய்து வருகின்றன.

## வைர வியாபாரி மிரட்டல்!

ரோம், பிப். 23—

எகிப்தில், பரூக், மன்னராக இருந்தபோது இத்தாலிய வைர வியாபாரி ஒருவர், வைரமிழைத்த இரு தந்த மூக்குப்பொடி டப்பிகளை விற்றதாகவும், அதற்கு முழு தொகை இன்னும் தனக்கு தரப்படவில்லை என்றும், இதுவரை 10,000 பவுன் தான் கொடுக்கப்பட்டுள்ளதென்றும், இன்னும் 17,000 பவுன் தனக்குச் சேரவேண்டும் என்றும், இது தரப்படாவிட்டால் எகிப்து சர்க்கார்மீது வழக்கு தொடரப் போவதாகவும் அறிவித்திருக்கிறார்.

இந்தப் பொடி டப்பிகள், ஏலம் போடப்படும் பரூக் சேகரித்த பொருள்களுடன் உள்ளன.

## அனுதாபம்

"முன்னாள் நீதிக் கட்சியின் தலைவரும் பல பொது ஸ்தாபனங்களில் கலந்து மக்கள் தொண்டாற்றியவரும், திராவிடர் இயக்க அனுதாபியுமான நெடும்பலம் திரு. என். ஆர். சாமியப்பா முதலியார் இயற்கை எய்தியமைக்கு வருந்துவதுடன், அன்னாரின்பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு நெடும்பலம் திராவிட முன்னேற்றக் கழகம் தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது," என செயலாளர் டி. என். கல்யாணசுந்தரம் அறிவிக்கிறார்.

# "பொறுப்புடன் பணியாற்றுகையில் சமுதாயத்தைப் பல கோணங்களில் காண வேண்டும்"

—— (:) ——

## "மக்கள் பணியில் ஈடுபடுகையில் மாணவர்கள் மனப் பண்பை இழத்தல் கூடாது"

திருச்சி, பிப். 21—

சமால் மகமது கல்லூரியின் மக்கள் பணி மன்ற ஆண்டு விழா 17—2—54 மாலை கல்லூரி அரங்கில் நடைபெற்றது. மாவட்ட மருத்துவ அதிகாரி தலைமை வகித்தார். தோழர் டி. கே. சீனிவாசன் (தாமரைச் செல்வன்) "மக்கள் பணி" குறித்துப் பேசுகையில், "மாணவர்கள்; மக்கள் பணியில் ஈடுபடுகையில் தங்களையே இழந்து விடக்கூடாது என்றும்; மக்களது மனப் பண்பையுணர்ந்து, பணியில் இறங்க வேண்டு"மென்றும் கூறினார்.

"சமுதாயத்தைப் பல கோணங்களிலிருந்து உற்று நோக்கி சிக்கலையும், சீர்கேட்டையும் செவ்வனே அறியவேண்டு மெனவும், நாட்டு மக்கள், சீரான வாழ்வடைய மக்கள் பணி மன்ற மாணவர்கள் பொறுப்புணர்வுடன், பணி புரிய வேண்டு"மெனவும் கூறினார்.

கல்லூரி மாணவர்களால் நடத்தப்படும் இலவச இராப் பள்ளி மாணவர்களுக்கு பரிசு வழங்கிய பின், தோழர் ஓ இருட்டினன் நன்றிகூறிய பின் மாணவர்களால், 'அன்பளிப்பு' என்ற நாடகமும் நடிக்கப்பட்டது.

## திருவேங்கடவன் கலைக் கல்லூரி தமிழ்மன்றம் ஆண்டு விழா

—:O:—

தோழர் நெடுஞ்செழியன் பேச்சு

திருப்பதி, பிப். 19—

இம்மன்றத்தின் ஆண்டு நிறைவு விழா 17—2—54 மாலை 4.30 மணிக்கு திரு. இ. ஆறுமுகம் எம். ஏ., தலைமையின் கீழ் நடைபெற்றது. திரு ஜி. விஜயகிருஷ்ணன், அனைவரையும் வரவேற்று பேசியபின், திரு. மோ. சாமுவேல் ஆண்டு அறிக்கை வாசித்தார்.

பின்னர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 'இலக்கியப் பூங்காவிலே' என்ற தலைப்பின் கீழ் நிகழ்த்திய சொற்பொழிவில், எத்தகைய இலக்கியங்கள் வாழும் என்பதையும், எத்தகைய இலக்கியங்கள் நாட்டை நன்னிலைப் படுத்தி மக்கள் உள்ளத்தில் மறுமலர்ச்சி யூட்டுமென்பதையும் விவரித்துப் பேசினார். மாணவர்கள் இம்மாதிரி மன்றங்களை இலக்கிய வளர்ச்சிக்கென பயன்படுத்திக்கொண்டு நாட்டிற்கும் மொழிக்கும் — தொண்டாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். செயலாளர் தோழர் ஜு. இலக்குமிபதி நன்றி கூறினார்.

## வெள்ளம் தந்த லாபம்!

ஜம்மு, பிப். 20—

ஜம்முவுக்கு 20 மைல் தொலைவிலுள்ள அக்னூரின் சாலுப் நதிப் படுகையில் வைக்கப்பட்டிருந்த இரண்டு லட்சம் ரயில்வே ஸிலிப்பர் கட்டைகளை, நேற்று நதியில் ஏற்பட்ட வெள்ளம் பாகிஸ்தான் பகுதிக்கு அடித்துக்கொண்டு போய்விட்டது.

முன்பொரு தடவை இதுபோல லட்சம் கட்டைகளை பாகிஸ்தான் பகுதிக்கு இழுத்துப்போயிருக்கிறதாம்!

லண்டன், பிப். 19—

பிரிட்டன், 1953ல், அதற்கு முந்திய ஆண்டைவிட அதிகக் கார்களை உற்பத்தி செய்துள்ளது. சென்ற ஆண்டு 5,94,808 கார்கள் உற்பத்தி செய்யப்பட்டன. (1952ல் 4,48,000 கார்கள். 1,09,800 டிரேக்டர்கள் சென்ற ஆண்டு தயாரிக்கப்பட்டன.

## தஞ்சையில் நூதன சாகுபடி

—:O:—

### உணவு உற்பத்தியை தீவிரமாக்க திட்டம்

தஞ்சாவூர், பிப். 20—

தஞ்சை மாவட்டத்தில் தற்போது நீர்பாசனம் செய்யப்படும் பகுதிகளில் தீவிர சாகுபடிக்கான திட்டங்களை தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் ஸ்தல அதிகாரிகள் சர்க்காருக்கு சமர்ப்பித்துவிட்டதாகத் தெரிகிறது.

3 ஆண்டிற்குள் நூதன சாகுபடி முறைகளைக் கையாளுவதன் மூலம் ஒரு லட்சம் டன் நெல் உற்பத்தியை அதிகரிக்கும் திட்டமொன்றை இதில் சேர்க்கப்பட்டுள்ளது.

நல்ல ரக விதைகளை விரிவாக உபயோகிப்பது, பசுந்தழை உரத்திற்காக சீமை அகத்தியை நன்செய் நிலங்களில் பயிரிடுவது, ரசாயன எருவுக்காக ரயத்துகளுக்கு கடனாக முன்பணம் கொடுப்பது ஆகியவற்றில் விவசாய இலாகா கவனம் செலுத்தும்.

நெல் வயல்களில் கோடை காலத்தில் நிலக்கடலை, பருத்தி போன்ற வர்த்தகப் பயிர்களை சாகுபடி செய்யவும், குறுவை நாற்றுகளைத் துரிதமாகப் பயிரிட உதவியாகவும், ரயத்துக்கள் நிலங்களில் ஆண்டொன்றுக்கு 400 பில்டர் பம்பு செட்டுகள் அமைக்கப்படும்.

தஞ்சை மாவட்டத்தில் $2\frac{1}{2}$ லட்சம் ஏகரா சம்பா தாளடி நிலங்களில் சீமை அகத்தி பயிரிடப் பட்டிருப்பதாகவும், 1,400 மூட்டை சீமை அகத்தி விதை கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிகிறது.

## ஜப்பான் சாகுபடி முறையால் அரிய பலன்!

நெல் உற்பத்தி அதிகரிப்பு

புதுடில்லி, பிப். 21—

ஜப்பானிய சாகுபடி முறையை பின்பற்றும்படி செய்த முயற்சிகள் வெற்றி பெற்றிருக்கின்றன வென்று குடியானவர்கள், விவசாய நிபுணர்கள், மாநில சர்க்கார் அதிகாரிகள் முதலியவர்களிடமிருந்து இங்கு வந்திருக்கும் தகவல்களிலிருந்து தெரிய வருகிறது.

ஜப்பானிய முறையைப் பின்பற்றி 2.60 லட்சம் ஏகரில் சாகுபடி நடைபெற்றிருக்கிறது. இதைத் தவிர 30 லட்சம் ஏகரில் இம்முறையைப் பின்பற்றி சாகுபடி நடந்திருக்கிறது.

இதனால் சராசரி ஒரு ஏகருக்கு 40 மணங்கு நெல் அதிகப்படி ஆகியிருக்கிறதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்முறையைப் பின்பற்றியதில், மைசூரில் விளைந்ததைப் போல் வேறெங்கும் அமோகமாக நெல்விளைந்ததாகத் தெரியவில்லை.

இங்கு சில பண்ணைகளில் 144 மணங்குக்கு மேல் கண்டு முதலாயிருக்கிறது.

சென்னையில் ஜப்பான் முறைப்படி 20 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி நடந்திருக்கிறது. விளைச்சல் விவரம் தெரியவில்லை.

மத்தியப் பிரதேசத்தில் உள்ள பார்வாடா கிராமத்தில் ஒரு குடியானவர் மேற்படி முறையைப் பின்பற்றியதில் ஒரு இடத்தில் நெல்கதிர் எட்டடி வரை வளர்ந்து பசுமை குன்றுமலிருந்தது என்று கூறினார்.

## செய்திச் சுருக்கம்

★

லண்டன், பிப். 21—

பிரிட்டன், ஜலவாயுக் குண்டு சம்பந்தமான சில பரிசோதனைகளை நடத்தும் எனத்தெரிகிறது.

* * *

ஷில்லாங், பிப். 21—

அஸ்ஸாம் போலீசார், சர்க்கார் பியூன்கள் ஆகியவர்களுக்கு இவ்வாண்டு ஏப்ரல் முதல் ரூ. 3 முதல் ரூ. 5 வரை சம்பள உயர்வு கொடுக்கப்படும்.

• * •

புதுடில்லி, பிப். 21—

தவளகிரி மலை மீது ஏறவிருக்கும் 10 பேர் கொண்ட அர்ஜென்டினா குழு, தங்களுக்கு வெற்றி கிடைப்பது நிச்சயம் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறது.

* * *

பெர்லின், பிப் 23—

ஆசிய நாடுகளுடனும், மத்தியக் கிழக்கு நாடுகளுடனும் வர்த்தக உறவை அதிகரிக்கச் செய்வதில் ரஷ்யா தீவிரமாக கவனம் செலுத்தி வருகிறது.

• • •

பம்பாய், பிப். 19—

ஆசியாவிற்கான ஐ. நா. பொருளாதாரக் கமிஷன் புள்ளி விவர நிபுணர்களின் மூன்றுவது பிரதேச மாநாடு புதுடில்லியில், மார்ச். 1-ந் தேதி முதல் 13-ந் வரை நடைபெறும்.

• • •

மாட்ரிட், பிப். 21—

ஸ்பெயினுக்கு அமெரிக்கா அனுப்பும் உதவியில் முதல் தவணையாக டாங்கிகள், துப்பாக்கிகள் விமானங்கள், லாரிகள் ரேடியோ சாதனங்கள் ஆகியவைகள் வந்திறங்கின.

• • •

பாட்னா, பிப். 23—

பீஹாரின் $4\frac{1}{2}$ கோடி ஏகரா நிலங்களில் பாதிக்குமேல் பயிர் விளையும் நிலங்களாகும். 71,86,000 டன்அரிசி, கோதுமை தானியங்கள் உற்பத்தி செய்யப்படுகிறது.

* * *

சென்னை, பிப். 21—

தென்னிந்தியாவில் கைத்தொழில் டிரிபியூனலை சென்னையைத் தலைமை இடமாகக் கொண்டு ஏற்படுத்தவேண்டும் என்று ஆந்திர வர்த்தக சபை இந்திய சர்க்காரைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

* * *

வாஷிங்டன், பிப். 23—

இந்தோ—சீனா போரில், சீனா நேரிடையாகத் தலையிட ஏற்பாடுகள் நடைபெறுவதாகவெளியான இரகசியத் தகவல்களைக் குறித்து அமெரிக்க யுத்த இலாகா நிபுணர்கள் பரிசீலனை செய்து வருவதாகத் தெரிகிறது.

* * *

புதுடில்லி, பிப் 23—

உள்நாட்டிலும், கடலிலும் மீன்களை ஆராய்ச்சி செய்து, அவைகளை அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் ஒன்றைத் தயாரிக்க யூனியன் சர்க்கார் ஒரு நிபுணர்கள் அடங்கிய விசேஷ கமிட்டி ஒன்றை ஏற்படுத்தியுள்ளனர்.

• • *

சென்னை, பிப். 23—

பழைய லேபின் டிரேட் மார்க்கைக் கொண்டு மட்டரகப் பொருள் உற்பத்தி செய்து தரப்படுகிறதென்றும், இதற்கு இடம் தராமலிருக்கவேண்டுமென்றும் டிரேட் மார்க் விசாரணைக் கமிட்டி முன் தமிழ் வர்த்தக சபை வற்புறுத்தியிருக்கிறது.

* * *

கெய்ரோ, பிப். 23—

புதுடில்லியில் வருகிற அக்டோபரில் இந்தியத் தபால் தலைகள் வெளியிட்டு 100 ஆண்டுகள் பூர்த்தியானதைக் கொண்டாட சர்வ தேச தபால் தலைகள் கண்காட்சியொன்று நடைபெறும். இதில், எகிப்தும், தன் தபால் தலைகளைக் காட்சிக்கு வைக்கும்.

ஃ ஃ ஃ

கராச்சி, பிப். 23—

பாகிஸ்தானிலுள்ள இஸ்மாயிலி வகுப்பினருக்கு நிதி உதவி செய்ய நிதி கார்ப்பரேஷன் ஒன்றை ஏற்படுத்த ஆகாகான் பிளாட்டினம் விழா குழுவினர் முடிவு செய்துள்ளனர். ரூ. 1,50,00,000 இதற்கு மூலதனமாக நிர்ணயிக்கப்படும்.

* * *

லண்டன், பிப். 21—

'காரகாஸ்' என்ற இடத்தில் அடுத்த மாதம் நடைபெறும் மாநாட்டில், குடிமாலா நாடு, பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் ஜெகனை ஆதரிப்பதுடன் மட்டுமின்றி, ஹோண்டுராஸ், பிரிட்டிஷ் கயானாவிலிருந்து பிரிட்டன் வெளியேற வேண்டுமென கோரப்படும் என்று தெரிகிறது.

* * *

லண்டன், பிப். 23

"குபன், எகிப்தின் அருப்பு கார்டு; அதை கவனமாக உபயோகிக்கவேண்டும். என்னை எல்லோரும் பெண் லோலன், உளாசப் பேர்வழி என்று எண்ணுகிறார்கள்; உண்மையில், என் நாட்டை பற்றி நான் கவலைப்படாத நாளே கிடையாது," என்று, எகிப்து முன்னாள் மன்னர் கூறுகிறார்.

## 'அநியாய வட்டிக்குச் சிலர் பணத்தை கொடுக்கிறார்கள்'

——(:)——

### 'அவர்களை விவசாயிகள் வெறுப்பதாகக் காணோம்'

### 'அநியாயக்காரர்களை' சுட்டிக்காட்ட கவர்னர் தவறிவிட்டார்!

புதுப்பட்டி, பிப். 19—

"பணத்தைச் சிலர் அநியாய வட்டிக்குக் கொடுக்கிறார்கள். ஆனால், வட்டிக்குப் பணம் வாங்கிக்கொண்டுள்ள கிராம விவசாயிகள் இந்த அநியாய வட்டிக்காரர்களை வெறுப்பதாகத் தெரியவில்லை, இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு வழக்கறிஞர்களும் விவசாயிகளிடம் பணம் பறித்துக் கொள்கிறார்கள். இந்நிலை மாற, எல்லா இடங்களிலும் கூட்டுறவு இயக்கம் தோன்ற வேண்டும்"

என்று, சென்னை கவர்னர் பிரகாசா புதுப்பட்டியில் போர்டு ஆரம்பப் பள்ளியைத் திறந்து பேசும்போது குறிப்பிட்டார்.

மேலும் அவர் சொன்னார்:—

"என்னுடைய தாயகத்தில் இதற்கு வரவேற்பு கிடையாது. சென்னை மாநிலத்தார் கூட்டுறவு இயக்கத்தின் அவசியத்தை உணர்ந்துள்ளார்கள். விவசாயிகளுக்கு இந்த இயக்கம் பணம் கொடுக்கும்—ஆனால், லேவாதேவிக்காரர்களைப் போலல்ல—இந்தப் பகுதி மக்கள் நிலையை நன்குணர்வேன்," என்றார்.

## சோப் தொழிலில் நெருக்கடி

### பாக். மார்க்கெட்டுகளை இழந்ததின் விளைவு!

கல்கத்தா, பிப் 23—

சோப் தொழிலில் மிக நெருக்கடியான நிலைமை இப்போது ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் இப்போது 66 சோப் தொழிற்சாலைகள் உள்ளன. ஆண்டு தோறும் 1,94,000 டன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இவைகளைத் தவிர சுமார் 4,000 சிறு யூனிட்டுகள் சோப் தயாரிப்பதையே குடிசைத் தொழிலாகக் கொண்டிருக்கின்றன. இவைகள், ஆண்டிற்கு 76,000 டன் சோப்புகளை உற்பத்தி செய்கின்றன.

பாகிஸ்தான் மார்க்கெட்டுகளை இழந்ததினால்தான் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதென்று கூறப்படுகிறது.

மக்களிடம் வாங்கும் சக்தி குறைந்திருப்பதும் மூலப் பொருள்கள் விலை மிகவும் அதிகரித்திருப்பதும் இந்நிலைமை ஏற்படுவதற்கான காரணங்களாகும்.

சுமார் 10,000 பேர்களுக்கு மேல் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர்.

## ஏக்கருக்கு 7,785 ராத்தல் நெல்

நன்னிலம், பிப். 20—

நன்னிலம் தாலுகா விளாகம் கிராமத்தில் ஆர். சிவசுப்ரமணிய பிள்ளை தமக்குச் சொந்தமான நிலத்தில் சாகுபடி செய்து நன்னிலம் தாலுகா விவசாய அதிகாரிகள் முன்னிலையில் அறுவடை செய்ததில், ஏக்கர் 1க்கு 122 கலம் 6 மரக்கால் அளிக்கப்பட்டது. நிறுத்ததில் 7,785 ராத்தல் எடை இருந்தது. இவர் போட்டிகளில் கலந்து பல பரிசுகளும், சர்டிபிகேட்டுகளும் பெற்றிருக்கிறார். இவ்வாண்டில், ஜப்பான் சாகுபடி முறையில் நெல் நடப்பட்டிருந்தது.

## கவலையில்லை!

புதுடில்லி, பிப். 23—

பார்லிமெண்ட் உறுப்பினர்கள் அறிந்து கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஜப்பானிய விவசாய முறை கண் காட்சி எம். பி.-க்களுக்குச் சிரத்தையை உண்டாக்கவில்லை. சுமார் 150 உறுப்பினர்களே இந்தக் கண்காட்சியைக் கண்டனர்.

## போக்குவரத்து வசதிக் குறைவே வருணாச்ரமப் பிரிவினைக்கு காரணமாம்!

### சனாதனத்தைப் புகுத்திய உண்மையை மறைக்க சேலத்தய்யரின் விஷமம்!

சேலம், பிப் 19—

நாமக்கல் தாலுகா பாலப்பட்டி சேரிக்குளில் ஜில்லா அரிஜன சேவா சங்கத் தலைவர் வாஞ்சி நாதய்யர் தலைமையில் ஜாதி ஒழிப்பு மாநாடு நடைபெற்றது. மதுவிலக்கு மந்திரி ஜோதி வெங்கடாசலம் மாநாட்டைத் திறந்து வைத்தார்.

மாநாட்டில், வாஞ்சி நாதய்யர் பேசுகையில் சொன்னார்:—

"ஆதி காலத்தில், சமூகம் ஒன்றாகத்தானிருந்தது; ஜாதி முறை இடையில் தான் வந்தது. அப்போழுது போக்குவரத்து வசதிகள் அதிகமில்லாததால் ஆங்காங்குள்ள மக்கள் தங்கள் வசதிகளை ஒட்டி சில பழக்க வழக்கங்களையும், கட்டுப்பாடுகளையும் கைக்கொண்டனர். அவற்றை ஒட்டி ஜாதி முறை எற்பட்டது," என்றார்.

மேலும் அவர் சொன்னார்:—

"இராமானுசர், திருப்பாணாழ்வார் முதலியவர்கள் அரிஜன முன்னேற்றத்திற்குப் பாடுபட்டார்கள். கடவுள் படைப்பில், உயர்வு—தாழ்வு இல்லையென்றே மகான்கள் கருதுகின்றனர்," என்றார்.

# வெறும் சம்பவக் கோர்வை! மக்கள் சங்கடம் தீர வகை கூறவில்லை!

— (:) —

## கல்வி திட்ட பெரும் எதிர்ப்புக்கு இருட்டடிப்பு

### அமைச்சர் குழு ஆணவப் போக்கிற்கு கவர்னரின் வக்காலத்து

சென்னை, பிப். 22—

சென்னை சட்டசபையின் வரவு — செலவுக் கூட்டம் இன்று ஆரம்பமாயிற்று. இரு சபைகளின் கூட்டுக் கூட்டத்தில் கவர்னர், பல்வேறு பிரச்சினைகள் பற்றி சர்க்காரின் கொள்கையை கீழ்க்கண்டவாறு விளக்கி பேசினார்.

ஆயிரம் பேர் வசிக்கும் கிராமத்துக்கு ஒரு பள்ளிக்கூடம் வீதம் அடுத்த கல்வி ஆண்டில் கிராமங்களில் 1,270 புதிய பள்ளிகள் திறக்கப்படும். புதிய கல்வித் திட்டம் பற்றிய பருலேக்கர் குழுவின் சிபாரிசுகள் பரிசீலிக்கப்படுகின்றன.

ஜூலை மாதம் மதுரையில் புதிய வைத்தியக் கல்லூரி ஆரம்பிக்கப்படும். சித்தூர் மாவட்டத்தின் மீது தமிழர் பாத்தியதைப் பற்றி சென்னை சர்க்கார் பரிசீலனை செய்து ஆந்திர சர்க்காரோடு கலந்து திருப்திகரமான உடன்பாடு காணப்படும்.

உணவு முறையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. மணிமுத்தாறு, மலம்புழை, முதலிய அணைத்திட்டங் களின் வேலை துரிதமாக்கப்படுகிறது. பொன்னி ஆறு திட்டத்திற்கு சீக்கிரம் அங்கீகாரம் கிடைக்கலாம்.

கிராமங்களுக்கு மின்சார வினியோகிப்பு வேலை அதிகமாக்கப்படுகிறது. பெரியாறு நீர் உபயோகித்து விசை உற்பத்தி செய்ய இன்னொரு திட்டம் ஆரம்பிக்கப்படும்.

தென் ஆற்காடு நெய்வேலி பழுப்பு நிலக்கரி சுரங்க வேலை லாபகரமாக வர்த்தக ரீதியில் நடத்த மூலதனம், நிர்வாகம் நிறுவுவது பற்றிய ஏற்பாடுகளை சர்க்கார் பரிசீலித்து வருகிறது.

நெசவாளர்களுக்கு உதவியாக உபரி நிதியைப் பயன்படுத்துவதற்கு ஆன திட்டங்களைச் சர்க்கார் தயாரித்து வருகிறது. அவை சீக்கிரம் அமுல் நடத்தப்படும்.

மதுவிலக்கு அமுல் வேலை பூராவையும், போலீசாருக்கு மாற்றி விட்டதாகவும், மதுவிலக்கைக் கண்டிப்பாக அமுல் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

நீர்த் தேக்கங்களில் போதிய தண்ணீர் இருப்பதால் இந்த சீஸனில் மின்சார வெட்டு இராதென்று நம்பிக்கைத் தெரிவித்து தமது பிரசங்கத்தை 17 நிமிஷத்தில் முடித்தார்.

இந்தக் கூட்டத் தொடரில் பின்கண்ட விஷயங்களில் சட்டம் செய்ய சர்க்கார் உத்தேசித்துள்ளனர்.

"சுயமரியாதைத் திருமணங்களைப் பின்பற்றி நடந்த திருமணங்கள் செல்லுபடியாகாது என்று உயர்நீதி மன்றம் முடிவு செய்துள்ளது ஆகையால் அத்திருமணங்கள் காரணமாகப் பிறந்த குழந்தைகளுக்குச் சட்ட அங்கீகாரம் இல்லை. இந்த சட்டத்தின் குறைகளை நீக்குவதற்கு மசோதா கொண்டுவர தீர்மானித்துள்ளனர்.

சென்னை விபசார தடைச் சட்டம் பல துறைகளில் குறையுள்ளதாகஇருக்கிறது. இக்குறை நீக்குவதற்கு சீக்கிரத்திலேயே திருத்த மசோதா கொண்டு வர உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

கால்நடைகள் இனப்படி

மேய்ந்து பயிர்களைப் பாதிப்பதை தடைசெய்ய உள்ள சட்டம் இன்றைய நிலைமைக் கேற்றபடி இல்லை. அதைச் சரியானபடி அமைப்பது அவசியமாகிறது. இதற்காகச் சட்டம் செய்வதும் அவசியம்.

## ஆசிய மாநாடு

இந்தியா அழைக்கப்படலாம்

லண்டன், பிப். 21—

ஆசிய மகாநாட்டில் எந்தெந்த நாடுகள் கலந்து கொள்ள அழைக்கப்படலாம் என்பது பற்றி இதற்குள் சொல்ல முடியாதென்றாலும், இந்தியா இம்மகாநாட்டிற்கு அழைக்கப்பட்டு முக்கிய பங்கை ஏற்கும் என்று தெரிகிறது.

## சேலம் நகர தி. மு. கழக உறுப்பினர்களுக்கு

24-2-54 இரவு 9 மணிக்கு செவ்வாய்ப்பேட்டை கழகத்தில் மேற்படி கூட்டம் நடைபெறும். அதுசமயம் 28-2-54-ல் பொதுச் செயலாளர் அண்ணாதுரை சேலம் வருகிறபடியால், கூட்டம் சிறப்புற நடைபெறவும், நகரத்தின் சார்பில் நிதி அளிக்கும் விஷயமும் யோசிக்க வேண்டியிருப்பதால், இதையே அழைப்பாகக் கருதி எல்லா உறுப்பினர்களும் வரவேண்டுமாய்க் கோருகிறேன் என செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன் அறிவிக்கிறார்.

## நிறைவு விழா

சோலை அரசினர் கலைக் கல்லூரி தமிழ்ப் பேரவையின் நிறைவு விழாவில், 24-2-54 மாலை 4-30 மணிக்குக் கல்லூரிப் பெருமன்றத்தில், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பேசுவார்.

## தெய்வசிகாமணி ஆசாரியார் உள்ளிட்ட காந்தி நினைவுச் சின்ன குழுவினர் மீது வழக்கு

### ரூ. 500 சோ வேண்டுமென சித்திரம் தீட்டிய ஓவியர் தாவா

சென்னை, பிப். 23—

கே. வி. வைத்தியநாதன் என்பவர் சென்னையிலுள்ள ஒரு சிறந்த ஓவியர் கிண்டியில் உள்ள 'ராஜ் பவனில்' காந்தியாரின் உருவச் சிலை அமைப்புக்காக, நினைவு மண்டபச் சித்திரமொன்றை வரைந்து தருமாறு அவரிடம், காந்தியார் ஞாபகார்த்தக் குழுவின் உறுப்பினரான தெய்வசிகாமணி ஆசாரியார் கேட்டார். அதன்படி சித்திரக்காரரும், ஒரு பெரிய மேஜை உட்பட பல சாமான்களை வாங்கி ஓவியத்தை உருவாக்கினார் அந்த ஓவியமும், திருப்திகரமாயுள்ளதென, குழுவின் அங்கீகாரமும் பெற்று எல்லா செய்தித் தாள்களிலும் வெளிவந்தது.

ஓவியம் வரைந்ததற்கான, கூலியாக ரூ 500க்கு பட்டியல் ஒன்றை ஓவியக்காரர் அனுப்பினார். பட்டியலின் நகல், குழுவின் தலைவரான ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்களுக்கும், செயலாளர் ஆர். கிருஷ்ணமூர்த்தி எம்.பி. அவருக்கும் அனுப்பப்பெற்றன.

இருந்தாலும் கூலி ஓவியக்காரருக்குக் கிடைக்கவில்லை பதிலாக ஓவியம், இலவசமாகத் தீட்டித் தரப்படும் என்றெண்ணியதாகப் பதில் வந்ததாம்.

எனவே, ஓவியக்காரர் மேற்படி காந்தியார் ஞாபகார்த்தக் குழுவினர்மீது ரூ 500 ஓவியக் கூலி கோரி, சென்னை நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடுத்திருப்பதாக அறியப்படுகிறது.

—O—

## பிரிட்டிஷ் ராணிக்கு தமிழிலும் வரவேற்பு

கொழும்பு, பிப். 23—

பிரிட்டிஷ் ராணி எலிசபெத் இங்கு வரும்போது அவருக்கு ஆங்கிலம், தமிழ், சிங்கள மொழிகளில் வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்க கொழும்பு முனிசிபல் சபை தீர்மானித்துள்ளது.

# காங்கிரஸ் அடிப்படைத் திட்டத்தில் கோடரி இடி!

### ஆந்திராவில் மதுவிலக்கு மண்ணைக் கவ்வுகிறது!

கர்நூல், பிப். 22—

"மதுவிலக்குச் சட்டம் படு தோல்வி அடைந்துவிட்டது. மதுவிலக்குத் திட்டத்தைப் பொது மக்கள் ஆதரிக்காததே அதற்குக் காரணம். மதுவிலக்கு இருந்தபோதிலும் குடிப்பவர்கள் குடித்துக்கொண்டு தானிருக்கிறார்கள்,"

என்று, தோழர் எஸ். வி. ராமமூர்த்தி தலைமையில் நியமிக்கப்பட்ட ஆந்திர மதுவிலக்கு விசாரணை கமிட்டி வெளியிட்டுள்ள சிபாரிசில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தச் சிபாரிசு ஆந்திர சட்டசபையில் மதுவிலக்கு மந்திரி பட்டாபி ராமராவினால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் கமிட்டியின் சிபார்சில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"மதுவிலக்கினால் குடிக்காரர்கள் எண்ணிக்கை குறையவில்லை; முன்பு தொழிலாளர் மட்டும் குடித்தனர்; இப்போது மத்திய வகுப்பினரும், பார்ப்பனர்களும், க்ஷத்திரியர்களும் கூட குடிக்கிறார்கள்."

"மதுவிலக்கு அமுலில்லாத போது, சரியான முறையில் காய்ச்சப்பட்ட சாராயத்தை விட, மதுவிலக்கு அமுலான பிறகு காய்ச்சப்படும் கள்ளச் சாராயம் உடல் நலத்தைப் பெரிதும் பாதிக்கிறது."

"மதுவிலக்கு, கூட்டுறவு, போலீஸ் ஆகிய மூன்று இலாகாக்களிலும் லஞ்சம் தாண்டவமாடுகிறது. பொது மக்கள் ஒத்துழைப்பு இல்லாது போனால் எவ்வளவு அதிகப்படியான போலீஸ் படையை வைத்துக் கொண்டாலும் மதுவிலக்கை வெற்றிகரமாக நடத்த முடியாதென்று கமிட்டியின் சிபார்சு செப்புகிறது.

மதுவிலக்கிற்கு முன்னுள்ள காலால் வருமானம் 5 கோடி ரூபாயாக இருந்தது. மதுவிலக்கு செய்த பின் இப்பொழுது அந்த இனத்தில் வருமானம் 11 லட்சமாகக் குறைந்துவிட்டது.

அந்தக் காலத்தில் கலால் இலாக்காவிற்கு செலவிடப்பட்ட தொகை 19 லட்சரூபாயாகும், மதுவிலக்கிற்குப் பிறகு, அதைக் கண்காணிப்பதற்காக செலவிடப்படும் தொகை 31 லட்ச ரூபாயாகக் கூடிப் போய் இருக்கிறது.

கமிட்டியின் சிபாரிசுகளாவன:

கள் குடிக்க தடை இருக்கக் கூடாது. நாட்டுச் சாராயம் பங்கீடு செய்யப்பட வேண்டும். கள்ளுக்கடை அனுமதி ஏலம் விடப்படவேண்டும் மக்கள் குடியிருப்பு வீடுகளுக்குப் பக்கத்தில் கள்ளுக்கடை வைக்க அனுமதிக்கக்கூடாது. 21 வயதுக்குட்பட்ட ஆண், பெண்களுக்கு கள் விற்கக் கூடாது. டாக்டர் அனுமதியில்லாமல் வெளி நாட்டு மதுவகைகளை கொடுக்கலாம்.

அபினி, கஞ்சா கட்டுப்பாடு முன்பிருந்தது போலவே நீடித்திருக்கலாம்.

மதுவிலக்கினால் அரசாங்கத்திற்கு வரக்கூடிய வருமானம் தேசிய திட்டத்திற்குப் பயன்படவேண்டும்.

## தூத்துக்குடி......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லாளர் அண்ணாதுரை நன்றி தெரிவித்துப் பேசினார்.

அவர், அமெரிக்க - பாக். இராணுவ ஒப்பந்தம் பற்றிப்பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"50 நாடுகளில் இந்தியாவின் தூதுவராலயங்கள் இருக்கின்றன; நேருவின் தலைமை வேறு இருக்கிறது; இவ்வளவு செல்வாக்கிருந்தும் அமெரிக்க - பாக். உத்தேச இராணுவ உடன்படிக்கையை தடை செய்ய முடியவில்லையென்றால் அமெரிக்காவிலுள்ள விஜயலட்சுமி பண்டிட்டினது பதவி விலகல் கடிதத்தை அமெரிக்காவிடம் கொடுத்து விட்டு ஏன் திரும்பக் கூடாது? இவ்விதம் செய்திருந்தால் அமெரிக்காவுக்கு அவ்வளவு துணிச்சல் ஏற்பட்டிருக்காது. இனிமேற் கொண்டாவது இதை வலியுறுத்தி, தீர்மானம் நிறைவேற்றி இந்திய அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டும்.

"திராவிட நாடு சம்பந்தமாக டில்லி அரசாங்கம் ஒரு தூதுக் குழுவை அனுப்பி திராவிட கழகத் தலைவர் பெரியார் ராமசாமியுடன் கலந்து பேசி ஒரு முடிவு காண வேண்டும். அதுதான் அரசியல் தந்திரத்துடன் கூடிய முறையாகும் என்று கூறிப் பிட்டு, அத்தக்க நிதி சேர்ப்பதின் அவசியம் பற்றி பேசினார்.

## மலபார் ஆரம்ப ஆசிரியர் தூதுக் குழு

### ரயில் நிலையத்தில் வரவேற்பளிக்க முடிவு

சென்னை, பிப். 23—

"சம்பள உயர்வு ஆரம்ப ஆசிரியர்களின் நீண்ட கால கோரிக்கை; நியாயமான இக் கோரிக்கையை அனுமதித்துக் கொடுப்பதற்குப் பதிலாக அதிக நேர வேலையும், வேலையில்லாத் திண்டாட்டமும்தான் புது கல்வித் திட்டத்தால் ஆரம்ப ஆசிரியர்களுக்குக் கிடைத்தது.

இவ்விஷயமாக அரசாங்கத்திடமும், சட்டசபை அங்கத்தினர்களிடமும் எடுத்துக் கூறி, ஆசிரியர்களின் கோரிக்கைகளைப் பெற மலபாரிலிருந்து இம்மாதம் 26-ந் தேதியன்று, 27 ஆசிரியர்களடங்கிய ஒரு தூதுக்குழு காலை 7-30 மணிக்கு மங்களூர் எக்ஸ்பிரசில் சென்னைக்கு வருகிறார்கள். அவர்களுக்கு சென்னை நகர ஆரம்ப ஆசிரியர் யூனியன் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் வரவேற்பளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது ஆகையால் சென்னையிலுள்ள எல்லா ஆசிரியை—ஆசிரியர்களும், கல்வி அபிமானிகளும், 26-ந் தேதி காலை 7 மணிக்கு சென்ட்ரல் ரயில் நிலையத்தில் வந்திருந்து வரவேற்பில் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்," என்று வி. ராமுண்ணிமேனன் (பொதுச் செயலாளர் ஆரம்ப ஆசிரியர் யூனியன்) கேட்டுக் கொள்கிறார்.

## தொழிலாளர் வெற்றி

திருச்சி, பிப். 22—

திருச்சி பாண்ரெங்க மார்க் சுருட்டுக் கிடங்கு தொழிலாளர்களுக்கும் — முதலாளிக்கும் வழக்கு நடைபெற்று வந்தது. அது சம்பந்தமாக 17—2—54ல், வெளிவந்துள்ள சர்க்கார் கெஜட்டில் தொழில் கோர்ட்டின் தீர்ப்பு வெளி வந்துள்ளது.

அந்தத் தீர்ப்பில், எல்லா தொழிலாளர்களும் தீர்ப்பு வெளிவந்த 15 நாட்களுக்குள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமெனவும், நஷ்டஈடாக ரூ. 3,315 தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# தி. மு. கழக

## பொதுக் குழுக் கூட்டம்

★

தி. மு. கழகப் பொதுக் குழுக் கூட்டம் 7—3—1954 ஞாயிறன்று திருச்சியில் கூடும். விபரம் அடுத்த அறிக்கையில்.

சென்னை, 5-2-54. } சி. என். அண்ணாதுரை, பொதுச் செயலாளர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, முத்தியால் நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.